உ

கடவுள் துணை.

வள்ளியம்மன் ஆபாலோட்டம்

# குறவஞ்சி.



சென்னை-சூளை.

சங்கநிதிவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

உ

சிவமயம்.

# வள்ளியம்மன் ஆயாலோட்டம்

# குறவஞ்சி.

காருலவும்பூவுலகைக் கனிக்காயவலம்வந்த
சீருலவுமபோரூரான் றேவியெனத்தார்புனைந்த
மங்கைவள்ளிநாயகியின் மாகுறத்தைப்பாடுதற்குத்
துங்கவைங்கரன்றாள் துணை.

## குறம்.

தினதெந்தினா தினதெந்தினா தினதெந்தினா தினனா
தென்னாதி னாதினனா தினதெந்தினா தினனா

சித்தர்கள்வாழ் மலையருயருகில் சிறந்தநல்ல வனத்தில்
தேவிவள்ளி மான்வயிற்றில் திருவுருவா யமைந்தாள் தின

மான்வயிற்றில் வந்துதித்த வஞ்சிகுற வள்ளி
வானமிர்தம வேண்டியவள் வாய்விட்டழுக லுமே தின
நம்பிராசன் சேனைகளும் நல்லமைந்தர் தாமும்
நாடியந்த வனந்தனிலே யோடிவந்தா ரவர்கள் தின
வனவேட்டை யாடியவர் வருகின்ற போது
வள்ளிபசி யால்மெலிந்து துள்ளியழு தாளே தின
அழுதகுரல் கேட்டவேடர் ஆச்சரியங் கொண்டு
அதிதுரித மாகவள்ளி யருகில்வந்துநின் று தின
மான்வயிற்றில் வந்துதித்த வஞ்சிதனைக் கண்டு
மறவனவன் மனைவியவள் வாரியெடுத் தணைத்தாள் தின
வாரி யெடுத்துமவள் மடிமீதி லமர்த்தி
வன்னமுகந் தானுடைத்துக் கண்ணைமுத்த மிட்டு தின
வார்காது மூக்குருவி வடிவுகளுஞ் செய்து
வாழ்த்தவள்ளி யென்றுசொல்லிப் பேருமிட்டா ரப்போ தின
ஒய்யார நெற்றிலே சுட்டிகளுங் கட்டி
ஓசையுள்ள தண்டைகொலுசு பாதத்தி லணிந்து தின
தளராமல் பசியாற்றித் தையல்வள்ளி தன்னை
தாமிருக்குங் குடிசைக்குள்ளே கொண்டுசென்று ரங்கே தின

வர்னப்பொன் தொட்டிலிலே மாதாசை வளர்த்தி
வகைவகையாய்த் தாலாட்டி மகிழ்ந்திருந்தா ரப்போ — தின

மணிகுலுங்கு தொட்டிலிலே மானீன்ற மகளும்
மாயமித்திரை செயதுபின்பு தூயகண்கள் விழித்தாள் — தின

வாரியெடுத்துக் குறத்தி மடிமீதில் வளர்த்தி
வாய்த்துடைத்து முத்தமிட்டு வள்ளியமைரக் கொஞ்சி — தின

நாளொரு மேனியுமாய் நலமுடனே வள்ளி
நாயகியும் வேலவற்கு மீறிவளர்ந் தாளே — தின

ஓராண்டு ஈராண்டு மூவாண்டு சென்று
உயர்ந்தநல்ல சந்திரன்போல் ஓங்கிவளர்ந் தாளே — தின

ஐந்திரண்டு வயதுதனில் கொஞ்சிவிளை யாடி
ஆறிரண்டு வயதுதனில் குறக்கூடை யேந்தி — தின

கொஞ்சிக்கொஞ்சிக் குறியுரைத்துக் கோதைவளர் நாளில்
கொம்பனையாள் வள்ளியமைரத் தினைப்புனத்துக் கனுப்ப — தின

எழுபே ரண்ணமார்கள் இவளருகில் வந்து
இளங்கொடியாள வள்ளியமைரத் தினைப்புனத்துக்கழைக்க — தின

நல்லதென்று அண்ணருக்கு நாயகியா ளுரைத்து
நடந்தாளே யிடைகுலுங்க நங்கையரு மப்போ — தின

காடுவெட்டி முள்பொறுக்கக் கதித்ததினைப் புனத்தில்
கன்னிவள்ளி ஆயாலோட்டக் கடுகிநடந் தாளே — தின
மேடுவெட்டி முள்பொறுக்கி விரைத்ததினைப் புனத்தில்
மெல்லிவள்ளி ஆயாலோட்ட மெள்ளநடந் தாளே — தின
கொஞ்சித்தழை தாவொடித்துக் கொற்றவர்கள் வேடர்
கொம்பனையாள் வள்ளியற்கும் பரணைகட்டி யமைத்தார் — தின
அண்ணமா ரமைத்துவைத்த அழகுள்ள பரணையில்
அம்மைவள்ளி நாயகியும் ஆயாலோட்டி யிருந்தாள் — தின

## தேவாரம்.

கள்ளராமசுரர்காலா கங்கைவேணியர்க்குப்பாலா
புள்ளிமாமயிலிலேறும் புனிதனேபோரூரானே
வள்ளிநாயகியாள்காத்த வளமைசேர்தினைப்புனத்தில்
தெள்ளுநற்குறத்தைப்பாடத் தேசிகாவருள்செய்வாயே.

## குறம்.

பத்தினியாள் வள்ளியரும் பரணதிலே யேறி
பரமசிவன் தன்னருளால் ஆயாலோட்டு கின்றாள் — தின
சிவப்புக் கவணதனைச் செங்கையினு லெடுத்து
தேவிவள்ளி நாயகியுஞ் சீக்கிரமா யெறிந்தாள் — தின

தங்கக் கவணெடுத்துத் தையலந்த வள்ளி
தந்தையைப்போல் வாய்திறந்து ஆயாலோட்டுகின்றுள் தின

ஆலக்கிளி நீலக்கிளி ஆலாலோ ஆலோ
அச்சமுள்ள பச்சைக்கிளி ஆலாலோ ஆலோ தின

புதுநீர்க் கிளிகளாம் ஆலாலோ ஆலோ
தூதுவர்ணப் பூங்கிளிகாள் ஆலாலோ ஆலோ தின

வெள்ளைவர்ணக் கிளிகளா ஆலாலோ ஆலோ
விருந்துமேயும் பூங்கிளிகாள் ஆலாலோ ஆலோ தின

பச்சைவானப் பூங்கிளிகாள் ஆலாலோ ஆலோ
பறந்துமேயும் பூங்கிளிகாள் ஆலாலோ ஆலோ தின

சிவப்புவர்ணக் கிளிகளா ஆலாலோ ஆலோ
சேர்ந்துமேயும் பூங்கிளிகாள் ஆலாலோ ஆலோ தின

ஊதாநிறக் கிளிகளா ஆலாலோ ஆலோ
உகந்துமேயும் பூங்கிளிகாள் ஆலாலோ ஆலோ தின

பஞ்சவர்ணக் கிளிகளா ஆலாலோ ஆலோ
பறந்துமேயும் பூங்கிளிகாள் ஆலாலோ ஆலோ தின

சிட்டுநல்ல குருவிகளா ஆலாலோ ஆலோ
சிறுகுருவி பெருங்குருவி ஆலாலோ ஆலோ தின

மயிலைக் குருவிகளா ஆலாலோ ஆலோ
மஞ்சட் குருவிகளா ஆலாலோ ஆலோ தின

காக்காய் கழுகுகளா ஆலாலோ ஆலோ
காட்டில்வாழும் பட்சிகளா ஆலாலோ ஆலோ தின

கொக்குகளா கோழிகளா ஆலாலோ ஆலோ
கோகினங்களா அன்னங்களா ஆலாலோ ஆலோ தின

பட்சிகளா பறவைகளா ஆலாலோ ஆலோ
பறந்துமேயும் பூங்கிளிகாள் ஆலாலோ ஆலோ தின

அன்னங்களா மயிலினங்களா ஆலாலோ ஆலோ
அழகுள்ள கோரங்களா ஆலாலோ ஆலோ தின

புள்ளினங்காள் குயிலினங்காள் ஆலாலோ ஆலோ
வனததில்மேயும் பட்சிகளா ஆலாலோ ஆலோ தின

சேர்ந்துமவ ளாயாலோட்டிச் சிந்தைமிகக் களித்து
தினைப்புனத்தில் தோழியுடன் தானிருக்கும் வேளை தின

ஆயாலோட்டும் வள்ளிகுறல் அறிந்துவடி வேலர்
அருமுனிவர் தமையழைத்து ஆலோசனை கேட்டு தின

மயிலேறித் திருநீரிட்டு வடிவேலர் தாமும்
மாதுவள்ளி தினைப்புனத்தில் வந்துநின்றா ரங்கே தின

வள்ளியரைக் கண்டப்போ வடிவேலர் மயங்க
மனதுமிரங்கி வார்த்தைசொல்லி வடிவேலர் நின்றார் தின

புத்தகத்தை மாற்றடிக்கும் பொக்காலி னழகும்
பூஞ்சலம்பு தண்டைகளும் பொறபீலி யழகும் தின

குருபபிள்ளை சாதழகும் குயபஸ்தனத் தழகும்
கோத்தமுத்து சரமதுபோல் கொமபணைபல் லழகும் தின

முருக்கம்பூ இதழழகும் முத்துநிகர் பலலும்
மெய்க்குழலின் திருமேனி யனிச்சமபூ திற்கும் தின

அழகைக்கண்டு வேல்முருக ராசைமிகக் கொண்டு
அம்மைவள்ளி நாயகியை யழகுமணம் புரிந்தார் தின

மாலையிட்டு வடிவேலர் மனமகிழ்ந்து அப்போ
மாதுவள்ளி யுடனுக வந்தார்திருத் தணிகை தின

வள்ளிகுறம் பாடினவர் வடிவேல சருளால்
மாருமல்லையகத்தில் வாழிவாழிவாழி. தின

வள்ளியம்மன் ஆயாலோட்டம் குறவஞ்சி.

முற்றிற்று.